# விமான முனையத்தில் மெட்ரோ ரயில் நேரத்தை காட்சிப்படுத்த முடிவு

சென்னை, ஏப்.2: விமானத்தில் வந்தடையும் பயணிகள் மெட்ரோ ரயில் போக்குவரத்தை அறிந்து, பயன்படுத்தும் வகையில், சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு, சர்வதேச முனையங்களில் மெட்ரோ ரயில் நேரத்தை காட்சிப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து மெட்ரோ ரயிலில் தினசரி 6,500 பேர் பயணிக்கின்றனர். இந்நிலையில், விமானத்தில் சென்னை வரும் பயணிகள் மெட்ரோ ரயில் போக்குவரத்தை அறிந்து பயன்படுத்துவதற்காக, விமான நிலையத்தின் உள்நாட்டு, சர்வதேச முனையத்தில் மெட்ரோ ரயில் நேரத்தை காட்சிப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக இந்திய விமான நிலையங்களின் ஆணையகம், சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகத்துடன் ஆலோசனை நடத்தி, ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலமாக, மெட்ரோ ரயில் போக்குவரத்தை அதிக மக்கள் பயன்படுத்துவதற்குவழிஏற்படும்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது:

உள்நாட்டு மற்றும் சர்வதேச முனையத்தின் குறிப்பிட்ட பகுதிகளின்வருகைஅரங்குகளில்மெட்ரோ ரயில் நேரம் காட்சிப்படுத்தப்படும். விமானநிலையத்தில் இருந்து பயணிகள் வெளியே வரும்போது, மெட்ரோ ரயில்களின் நேரத்தை தெரிந்துகொள்ள முடியும்.

விமானமுனையத்தில் உள்பகுதிகளில் காட்சி திரை மற்றும் தேவையான வசதிகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் செய்து கொடுக்கும். விமான முனையத்தின் வெவ்வேறு இடங்களில் இருந்து மெட்ரோ ரயில் நிலையத்துக்கு செல்லும் பாதையில் பயண வழி காட்டி படங்கள் வைக்கப்படும். இதற்கான பணிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. இந்த மாத இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அவர்.

உள்நாட்டு, வெளிநாட்டு விமானங்களின் நேரத்தை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஆய்வு செய்தது. அதன் பிறகு, மெட்ரோ ரயில் சேவைநேரத்தை அதிகாலையில் தொடங்கி நள்ளிரவு வரை விரிவாக்கம் செய்ய முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து, மெட்ரோ ரயில் முதல் சேவை அதிகாலை 4.30 மணிக்கு தொடங்கி, கடைசி சேவை இரவு 11 மணி வரை தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.